# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2220/19 - 2021 මාර්තු මස 22 වැනි සඳුදා - 2021.03.22

*2220/19 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (XV) (அ)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், இலங்கை, கிழக்கு பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும் (2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதிய 2160/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான), 1986 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 420/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின்* I *ஆம் நிரலில் காணப்படுகின்ற “கலை மற்றும் கலாசார பீடம்” என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற “12. ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை” என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-*

*“13. தமிழ் கற்கைகள் துறை”.*

பேராசிரியர் ***ஜீ. எல். பீரிஸ்,***
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2021, மாச்சு 18.*

*04-198*